இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 07.07.2026

# கரூரில் தீர்க்க வேண்டிய கணக்கு என்ன?

திருடனே, 'திருடன் … திருடன்' என பிடிக்க ஓடியதைப் போல – கரூரில் 41பேர் பலிக்கு காரணமானவர்கள், 'கரூரில் தீர்க்க வேண்டிய கணக்கு இருக்கிறது' என்று கனைப்பதைப் பார்க்கும் போது இவர்கள் மக்களை எவ்வளவு மடையர்களாக நினைக்கிறார்கள் என்றே கேட்கத் தோன்றுகிறது. 'வாழும் மக்களுக்கு மூளை இல்லை' என்று நினைக்கும் கும்பலாக விஜய் கும்பல் இருக்கிறது.

"கரூரில் போலீஸ்காரர்களை வைத்து இத்தனை பேரைக் கொன்று விட்டு எங்கள் மீது பழிபோடுகிறார்கள். எங்களுக்கு கரூரில் தீர்க்க வேண்டிய ஒரு கணக்கு இருக்கிறது" என்று அரசியலமைப்பு சட்டத்தின் பால் பதவி ஏற்றுக் கொண்ட அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேசுகிறார். என்ன கணக்கு இருக்கிறது? கரூர் காவலர்கள் அனைவரையும் அழிக்கப் போகிறீர்களா? கரூரையே காவு வாங்கப் போகிறீர்களா? போலீஸ் துறையை வைத்திருக்கும் முதலமைச்சர் விஜய் கருத்தா இது?

இப்படி ஆதவ் அர்ஜுனா பேசியதும் சமூக வலைதளத்தில் காறி துப்பினார்கள் மக்கள்.

எது கரூர் கணக்கு?

* **ஒட்டு மொத்தக் கட்சியும் தலைமறைவா ஓடி ஒளிஞ்சிங்களே… அதுவா?**
* **கரூரில் மக்களோடு நிற்காமல் தலை தெறிக்க ஓடினீங்களே, அதுவா?**
* **ஆடியோ லாஞ்சில் குத்தாட்டம் போட்டீங்களே, அதுவா?**
* **CBI விசாரணைக்குப் போனீங்களே, அதுவா?**
* **பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்க்காமல், பஸ் வைத்து உங்களைப் பார்க்க வரவழைத்தீங்களே… அதுவா?**
* **இன்று பா.ஜ.க.வை எதிர்த்து ஒரு கேள்வி கூட கேட்க முடியாத நிலையில் இருக்கிறீங்களே… அதுவா?**
* **இவ்வளவு நாள் கரூர் பக்கமே எட்டிப் பார்க்காமல் இப்போது கரூர் இடைத்தேர்தல் பிரச்சாரத்திற்குப் போகிறீங்களே, அதுவா?**

– என்று மக்கள் கேட்கிறார்கள். இதில் ஒரு கேள்விக்காவது பதில் சொல்ல துப்பு உண்டா?

கரூரில் நடந்தது பச்சைப்படுகொலைகள் ஆகும். படம் சூட்டிங் எடுப்பதற்காக நடத்திய சதிச் செயலில் நடந்த உயிர் பலிகள் ஆகும். சொன்ன நேரத்துக்கு வராமல் மக்களைக் காக்க வைத்து, சோறு தண்ணீர் இல்லாமலும் கூட்டத்தை அதிகமாக்கி மூச்சுத்திணற வைத்து திட்டமிட்டு நடத்தியது ஆகும். விஜய்க்காக, விஜய்யால், விஜய்யைச் சுற்றி இருந்தவர்களால் நடத்தப்பட்டது இது. பலியானதும் விஜய் ரசிகர்கள். விஜய் என்றால் யாரென்று தெரியாத குழந்தைகள்.

மதியம் 12 மணிக்கு விஜய் கரூருக்கு வரப்போகிறார் என்று காலை 9 மணி முதல் அனைத்து தொலைக்காட்சிகளிலும் செய்தி பரப்பினார்கள். காலை 10 மணி முதல் கூட்டம் கூடத் தொடங்கி விட்டது. ஆனால் விஜய் வந்தது இரவு 7 மணி. இது யார் செய்த சதி?

கரூர் மாவட்ட எல்லையான வேலாயுதம்பாளையத்துக்கு மாலை 4.45 மணிக்கே வந்துவிட்டார். ஆனால் ஊருக்குள் வராமல் காலதாமதம் செய்தார். இது யார் செய்த சதி?

**விஜய் வாகனம் ஊர்ந்து வருவதால் அதனுடன் பல்லாயிரக்கணக்கானவர்கள் வருகிறார்கள். கூட்டம் பேசும் இடத்திலும் பல்லாயிரக்கணக்கில் ஆட்கள் காத்திருக்கிறார்கள். கூட்டம் பேசும் இடத்துக்குள் விஜய் வாகனம் வருகிறது. அவரோடு வந்தவர்களுக்கும், ஏற்கனவே அங்கு இருந்தவர்களுக்கும் தள்ளு முள்ளு ஏற்படுகிறது.**

**இப்படி நடக்கும் என்று காவல் துறை முன்கூட்டியே பயந்து த.வெ.க.வைச் சேர்ந்த புஸ்ஸி ஆனந்த், நிர்மல்குமார் ஆகிய இருவரிடமும் உயர் அதிகாரிகள் எச்சரித்தார்கள். ஆனால் அவர்கள் அலட்சியப்படுத்தினார்கள். விஜய்யும் அலட்சியப் படுத்தி விட்டார். பலியானார்கள் 41 பேர்.**

கரூர் டவுன் காவல் நிலையம் FIR No. 855/2025 என பதிவு செய்யப்பட்ட வழக்கு இது. இந்த சதிச் செயல்கள் அனைத்தும் வெளியில் தெரிந்து விடும் என்பதற்காக சி.பி.ஐ. விசாரணை கேட்டு ஓடியது விஜய் கும்பல். இந்த வழக்கு CBI-க்கு மாற்றப்பட்டது. CBI பதிவு எண்: RC2172025S0022, தேதி 18.10.2025, CBI/AC-II, நியூ டெல்லி காவல் நிலையம் என பதிவு செய்யப்பட்டுள்ளது. சி.பி.ஐ. இப்போது விசாரிக்கும் வழக்கில் அதன் விசாரணையைச் சிதைக்கும் வகையில், அதில் சாட்சி சொல்லும் போலீஸாரை மிரட்டும் வகையில் அமைச்சர் பேசி இருக்கிறார்.

"சம்பவம் நடந்த இடத்தில் இருந்து அக்கட்சியின் தலைவர் சென்று விட்டார்" என்று அப்போதே சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி செந்தில்குமார் கண்டித்தார். விஜய் ஒருவாரமாக வெளியில் வரவில்லை. ஒருவாரம் கழித்து அழுகாச்சி வீடியோ வெளியிட்டார். ஆதவ் அர்ஜுனா தலைமறைவாகி விட்டார். உயிரிழந்தோரின் குடும்பத்தினரை சென்னைக்கு வரவைத்து அவர்களிடம் ஆறுதல் சொன்னார் விஜய். இப்போது ஆட்சி மாறியதும் காட்சி மாறுகிறது. 'கணக்கு தீர்க்கப் போகிறார்களாம்'.

**கரூரில் விஜய் கட்சி வெற்றி பெறவில்லை. அ.தி.மு.க. தான் வெற்றி பெற்றது. விஜய் 41 பேரை தனது ஆணவத்துக்காக பலியிட்டார் என்பதை கரூர் மக்களே உறுதி செய்து விட்டார்கள். பல்வேறு ஊழல் புகார்களுக்கு ஆளான கரூர் எம்.எல்.ஏ. விஜயபாஸ்கரை ராஜினாமா செய்ய வைத்து அங்கு இடைத்தேர்தலுக்கு ஏற்பாடு செய்வதும் விஜய்யின் குரூர மனப்பான்மைதான். 'கரூரில் ஜெயித்துக் காண்பிக்கிறேன்' என்ற ஆணவம்தான். இடைத்தேர்தல் பரப்புரைக்கு போவதற்கு முன்னால் கரூருக்குப் போய் கணக்குக் காட்ட நினைக்கிறார் விஜய்.**

'ஊரான் வீட்டு நெய்யில உங்க குடும்பத்துக்கு ஸ்வீட் செய்யாதீங்க' என்பது விஜய் விட்ட டயலாக் ஆகும். தனது அலட்சியம், ஆணவத்துக்காகப் பலியான குடும்பத்துக்கு அரசு வேலை தர விஜய் திட்டமிட்டுள்ளார். 'இதுதான் ஊரான் வீட்டு நெய்யில ஸ்வீட் செய்வது ஆகும்' என்று சமூக வலைதளத்தில் பலரும் கொந்தளித்து வருகிறார்கள்.

விஜய் ஆட்சிக்கு வந்ததும் போட்ட கையெழுத்தே பழிவாங்கும் நடவடிக்கைதான். 19 போலீஸ் அதிகாரிகளை கரூரில் இருந்து வேறுவேறு ஊருக்கு மாற்றினார் விஜய். இப்போது வெளிப்படையாக அந்த 19 பேர் தான் காரணம் என்பதைப் போல பேசுகிறார் அமைச்சர். எதையாவது சொல்லி செந்தில்பாலாஜியை கைது செய்யத் துடிக்கிறார் விஜய். அடுத்தவர்கள் மீது பழியைப் போட்டு தப்பிக்கப் பார்க்கிறார். எத்தனை ஆண்டுகள் ஆனாலும் விஜய் இதில் இருந்து தப்ப முடியாது.

**விஜய்க்காக காத்திருந்து காத்திருந்து மூச்சுத் திணறி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 41. இதில் ஆண்கள் 13 பேர். பெண்கள் 18 பேர். குழந்தைகள் 10 பேர். இதில் ஆண் குழந்தைகள் 5, பெண் குழந்தைகள் 5. இந்தப் பாவம் சும்மா விடாது.**

---

### "வெட்கமாயில்லையா விஜய் அரசே?"

# மு.க.ஸ்டாலின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு அகற்றம்!

## தி.மு.க. ஐ.டி.விங் கேள்வி!

சென்னை, ஜூலை 7 - முதலமைச்சர் ஜோசப் விஜய் செங்கல்பட்டு மாவட்டம் நெம்மேலியில் உள்ள கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தைப் பார்வையிடும் நிலையில், நெம்மேலி கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் இரண்டாவது பெரிய அலகுக்கான அடிக்கல் கல்வெட்டு அகற்றப்பட்டிருக்கிறது. இதற்கு தி.மு.க. ஐ.டி.விங் கடும் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

இதுகுறித்து தி.மு.க. ஐ.டி.விங் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது,

"சென்னையின் குடிநீர்த் தேவையைத் தீர்ப்பதற்காக 2006ஆம் ஆண்டில் தி.மு.க. அரசு நெம்மேலியில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தது. முத்தமிழறிஞர் கலைஞர் முதல்வராக இருந்தபோது, உள்ளாட்சித் துறை முதலமைச்சராக இருந்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தத் திட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்து நிறைவேற்றினார்.

2021ஆம் ஆண்டு அவரே முதலமைச்சரான நிலையில், பெருகி வரும் சென்னையின் மக்கள் தொகையையும், விரிந்து வரும் சென்னை மாநகராட்சியின் பரப்பளவையும் கருத்தில் கொண்டு 24.2.2024 அன்று நெம்மேலி கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் இரண்டாவது பெரிய அலகுக்கான அடிக்கல்லை நாட்டி, தற்போது பணிகள் ஏறத்தாழ நிறைவடையும் நிலையில், இதனைப் பார்வையிட முதல்வர் விஜய் வருகிறார் என்கிற அற்ப காரணத்திற்காக, இரண்டாம் அலகு திட்டத்தின் கல்வெட்டை அகற்றியிருக்கிறது த.வெ.க. அரசு.

ஆட்சிக்கு வந்த 50 நாட்களில் எந்தவொரு உருப்படியான திட்டத்தையும் உருவாக்க வக்கில்லாத விஜய் அரசு, திராவிட மாடல் அரசின் முதல்வர் தொடங்கிய திட்டத்தின் அடிக்கல்லை அகற்றுவது அதன் பயபீதியையே காட்டுகிறது. முடிவடையும் நிலையில் உள்ள திராவிட மாடல் அரசின் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் மீது ஸ்டிக்கர் ஒட்டுவதற்காக, கல்வெட்டை அகற்றுவது வெட்கமாயில்லையா திறமையற்ற விஜய் அரசே?" என தி.மு.க. ஐ.டி.விங் கேள்வி எழுப்பியிருக்கிறது.

ஆனால், இந்த கல்வெட்டு நெடுஞ்சாலை ஓரமாக இருந்ததால் பாதிப்புக்கு உள்ளானதாகவும், எனவே சீரமைக்கவே கல்வெட்டு அகற்றப்பட்டதாகவும் அதிகாரிகள் விளக்கமளித்துள்ளனர்.

இருப்பினும் முதல்வர் வருகை காரணமாக முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு அகற்றப்பட்டிருப்பது அரசியல் தளத்தில் விவாதங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

---

## நெம்மேலியில் கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்தை முதல்வராக இருந்த மு.க,ஸ்டாலின் தொடங்கி வைத்தபோது

# கம்பீரமாக அமைக்கப்பட்ட பிரம்மாண்ட கல்வெட்டை அகற்றிய த.வெ.க. அரசுக்கு கடும் கண்டனம்!

### ஒருவாரத்திற்குள் மீண்டும் அமைக்காவிட்டால் போராட்டம்!

### முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆவேசம்!






முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த போது எடுத்த படம்.



த.வெ.க. அரசு கல்வெட்டை அகற்றிய போது எடுத்த படம்.

**சென்னை,ஜூலை.7-**

**நெம்மேலியில் ரூ.1516.82 கோடி மதிப்பீட்டில் நாள் 1-க்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட 2-வது கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை அப்போது முதல்வராக இருந்த தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த போது, கம்பீரமாக அமைக்கப்பட்ட பிரம்மாண்ட கல்வெட்டில் திறந்து வைத்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெயர் இருந்ததால் அக்கல்வெட்டை அகற்றப்பட்டதற்கு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்வதோடு, ஒருவாரத்திற்குள் மீண்டும் அக்கல்வெட்டை அமைக்காவிட்டால் மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் போராட்டம் நடத்துவோம் என்று முன்னாள் அமைச்சர் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன் ஆவேசத்துடன் பேட்டியளித்துள்ளார்.**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நிருபர்களுக்கு அவர் அளித்த பேட்டி வருமாறு:-

சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை தீர்ப்பதற்காக கடந்த 2006 - 2011-ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியில், மாமல்லபுரத்தை அடுத்த நெம்மேலியில் நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்கான திட்டப் பணிகளை அன்றைய துணை முதல் அமைச்சராக இருந்த தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் 23-2-2010 அன்று அடிக்கல் நாட்டினார்.

### 9 லட்சம் மக்கள் பயன்பெறுகின்றனர்!

பின்னர் அந்த திட்டப் பணிகள் அ.தி.மு.க. ஆட்சியில் செயல்பாட்டுக்கு வந்தது. தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த திட்டத்தின் மூலம் சோழிங்கநல்லூர், நீலாங்கரை - ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், செம்மஞ்சேரி, துரைப்பாக்கம், பெருங்குடி, கொட்டிவாக்கம், பாலவாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, தரமணி, பள்ளிப்பட்டு, அடையாறு, பெசன்ட் நகர், நந்தனம், எம்.ஆர்.சி.நகர், மயிலாப்பூர், ராஜா அண்ணாமலைபுரம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் சுமார் 9 லட்சம் பொதுமக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

அதன்பின்னர் 2021-ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதல் அமைச்சராக தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர், பெருகி வரும் மக்கள் தொகையையும், விரிந்து வரும் சென்னை மாநகராட்சியின் பரப்பளவையும்கருத்தில் கொண்டு புதிய குடிநீர் திட்டத்தைநிறைவேற்றி,

நெம்மேலியில் ரூ.1516.82 கோடி மதிப்பீட்டில் நாள் ஒன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட இரண்டாவது கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை நாட்டு மக்களுடைய பயன்பாட்டிற்காக, கடந்த 24-2-2024 அன்று முதல்வராக இருந்த தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் நெம்மேலிக்கு நேரில் வந்து இந்த திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இந்த நிலையத்தில் இருந்து பெறப்படுகின்ற குடிநீர் மூலம் தென் சென்னை பகுதியில் அடங்கி உள்ள ஆலந்தூர், மூவரசம்பட்டு, வேளச்சேரி, புனிததோமையர்மலை, மேடவாக்கம், பல்லாவரம், சோழிங்கநல்லூர், கீழ்கட்டளை, உள்ளகரம், புழுதிவாக்கம், மடிப்பாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம் ஆகிய பகுதிகளில் உள்ள 9 லட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் இந்த திட்டம் மிகச்சிறப்பான வகையில் செயல்பட்டு வருகிறது.

இந்த திட்டம் தொடங்கப்பட்ட போது கடந்த 24-2-2024 அன்று முதல்வராக இருந்த மு.க.ஸ்டாலின் அவர்கள் நெம்மேலியில் இ.சி.ஆர். சாலையை யொட்டி பெரிய கல்வெட்டை திறந்து வைத்தார்.

இந்த நிலையில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டு புதிய முதல்வராக பொறுப்பேற்றுள்ள விஜய் இன்று நெம்மேலியில் உள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட வருகை தருகிறார்.

முதல் - அமைச்சர் விஜய் நெம்மேலிக்கு வருகிறார் என்கிற ஒரே காரணத்திற்காக நெம்மேலி கடல் நீரை குடிநீராக்கும் ஆலைக்கு முன்பு கம்பீரமாக அமைக்கப்பட்டிருந்த மிகப்பெரிய கல்வெட்டு அகற்றப்பட்டுள்ளது.

### ரீல்ஸ் ஆட்சி!

நெம்மேலியில் ரூ.1516.82 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்தை 24-2-2024 அன்று தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது என்று பொறிக்கப்பட்டிருந்த அப்பெரிய கல்வெட்டு எழுத்துக்களை முற்றிலும் இரவோடு இரவாக அகற்றப்பட்டுள்ளது. இந்த அராஜகச் செயலை மாவட்ட தி.மு.க. சார்பில் வன்மையாக கண்டிக்கிறோம்.

விஜய் முதல்வராக பொறுப்பேற்று 50 நாட்களாக ஆகியும் தமிழ்நாட்டில் உள்ள மக்களுக்காக எந்த ஒரு புதிய திட்டத்தையும் செயல்படுத்தாமல் திணறித்திணறி திறமையற்ற ஆட்சியை நடத்தி வருகிறார்.

மாறாக திராவிட மாடல் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்களை மட்டும் செயல்படுத்தி வருகிறார். அப்படி செயல்படுத்தும் திட்டங்களை தம்முடைய அரசு செயல்படுத்துவதாக ஸ்டிக்கர் ஒட்டி ரீல்ஸ் ஆட்சியை நடத்தி வருகிறார்.

தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்காக திராவிட மாடல் ஆட்சியில் நான் முதல்வன் தொடங்கப்பட்ட அற்புத் திட்டத்தால் இதுவரை 41 லட்சம் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் பயன் பெற்றுள்ளார்.

இந்த திட்டம் த.வெ.க. தற்குறி ஆட்சியில் திறன் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்துள்ளனர்.

அதைத் தொடர்ந்து முதல்வர் படைப்பகம் என்ற திட்டத்தின் பெயரில் உள்ள முதல்வர் என்ற பெயரை மட்டும் இந்த அற்ப ஆட்சியில் நீக்கம் செய்துள்ளனர்.

இந்த இரண்டு திட்டங்களில் இருந்த முதல்வர் என்ற பெயரை மட்டும் நீக்கிய இந்த ஆணவ ஆட்சியினர் இன்றைக்கு நெம்மேலியில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத் தொடங்கி வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் என்று பெயர் பொறிக்கப்பட்டிருந்த கல்வெட்டை அகற்றி இருப்பது ஆட்சியாளர்களின் ஆணவத்தின் உச்சமாகும்.

சீப்பை ஒளித்து வைத்தால் திருமணம் நின்று விடுமா? என்பது பிரபலமான தமிழ் பழமொழி ஆகும்.

நெம்மேலியில் மு.க.ஸ்டாலின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டை இன்றைக்கு அகற்றி இருக்கலாம்.

ஆனால் திராவிட மாடல் ஆட்சியில் முதல்வராக இருந்த மு.க.ஸ்டாலின் அவர்களின் பெயரை மக்கள் மனதில் இருந்து நீக்க முடியாது.

மகளிர் உரிமைத்திட்டம் - மகளிர் விடியல் பயண திட்டம் இருக்கும் வரை இந்த தமிழ்நாட்டை இன்றைக்கும் மக்கள் மனங்களில் முதல்வராக இருந்து தமிழ்நாட்டை ஆள்பவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் என்பதை யாராலும் மறைக்க முடியாது.

நெம்மேலியில் அகற்றப்பட்ட அக்கல்வெட்டை ஒருவாரத்திற்குள் அமைத்து விடுவோம் என குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள் என்னிடம் உறுதியளித்துள்ளனர்.

அநியாயமாக அகற்றப்பட்ட அக்கல்வெட்டை பழைய வடிவத்தில் ஒருவாரத்திற்குள் அமைக்காவிட்டால் மாவட்ட தி.மு.க. சார்பில் பொதுமக்களையும் - கழகத்தினரையும் பெருங்கூட்டமாக திரட்டி மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என்று எச்சரிக்கிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.